சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 106 | 20-06-2013

13-06-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சினிமாவும் அடையாள அரசியலும்**

**தொடக்கவுரையாடல் : க. ஆதித்தன்**

மக்களிடமிருந்தே கலைப்படைப்புகள் தோன்றுகின்றன தாம் தோன்றிய காலத்தையும் சூழலையும் அவை பிரதிபலிப்பதோடு நின்றுவிடாமல் சமூகத்தின் மீது தாக்கம் செலுத்தவும் செய்கின்றன.

தமிழ்ச்சூழலில் மேடைநாடகங்களின் வளர்ச்சி பெற்ற வடிவமாகவே சினிமா தோன்றியது. அது தனது தோற்றத்திலும் இயல்பிலும் அதிகரித்த வெகுசனத்தன்மையை கொண்டிருந்ததுடன் கலை என்று மட்டுப்படுத்த கூடிய அளவில் இல்லாமல் பெரும் பணம் புரளும் வணிக தொழிற்துறையாகவே நீடித்து வருகிறது.

தமிழ்ச்சினிமாவின் அரசியற்சார்பு தெளிவானது. காலம் தோறும் ஆதிக்ககருத்தியலையே பிரதிபலித்து வந்துள்ளதுடன் அதிகார வர்க்கத்துடன் சமரசப் போக்கையே கொண்டிருந்துள்ளது. பிரிட்டிஷ் ஆதரவுப் போர்ப்பிரச்சாரப் படங்கள் தொடக்கம் பார்ப்பனிய கருத்தியல் திராவிடக் கட்சிப்பிரச்சாரப் படங்கள், அண்மைக்கால அமெரிக்க ஆதரவு படங்கள் வரை குறிப்பிடலாம். அதிகரித்த முதலீடு தோற்றுவிக்கும் அதிக இலாபம் உழைப்பதற்கான நிர்ப்பந்தம், ஆதிக்க கருத்தியலாளர்களின் செல்வாக்கு உட்பட்ட காரணிகளை இப்போக்குக்கான பொதுவான காரணங்களாக குறிப்பிடலாம்.

சினிமாவினுள் கலகக்குரல்கள் அரிதானதாயும் வணிக எல்லைக்குட்பட்டதாயும் அவ்வப்போது ஒலித்தே வந்துள்ளன என்றபோதும் பெரும்பாலான சமயங்களில் அவை ஒடுக்கப்பட்டும் தடைசெய்யப்பட்டுமே வந்துள்ளன

தமிழக சினிமாவில் நிகழ்ந்த முக்கிய திருப்பம் மண்வாசனை சினிமாக்களின் தோற்றம். கிராமங்களின் இயல்பும் தமிழர்களின் வாழ் நிலையுமாக இருக்கும் சாதியத்தை தவிர்த்து வாழ்க்கையின் எந்த ஒரு அம்சத்தையும் பேச முடியாது என்ற சூழலில் சினிமா அதைக்கையில் எடுத்தபோதும் இயல்பான தமிழகக் கிராமங்களையோ சாதியின் உண்மையான வீச்சையோ சித்தரிக்கவில்லை என்பது விமர்சகர்களின் குற்றச்சாட்டு. மாறாக ஆதிக்க சாதிப் புகழ்ச்சியும் கால மாற்றத்தில் ஊசிப்போன பழைய மதிப்பீடுகளைக் கைவிடமுடியாது தவிக்கும் வாழ்ந்து கெட்ட பண்ணையார்களின் புலம்பலையுமே சாதியமாக சினிமா பதிவு செய்துள்ளது.

> தமிழ்ச்சினிமாவின் அரசியற்சார்பு தெளிவானது. காலம் தோறும் ஆதிக்ககருத்தியலையே பிரதிபலித்து வந்துள்ளதுடன் அதிகார வர்க்கத்துடன் சமரசப் போக்கையே கொண்டிருந்துள்ளது. பிரிட்டிஷ் ஆதரவுப் போர்ப்பிரச்சாரப் படங்கள் தொடக்கம் பார்ப்பனிய கருத்தியல் திராவிடக் கட்சிப்பிரச்சாரப் படங்கள், அண்மைக்கால அமெரிக்க ஆதரவு படங்கள் வரை குறிப்பிடலாம்.

இது போக மேம்போக்காக காதலில் சாதியின் குறுக்கீடு பற்றி படங்கள் வந்திருந்தாலும் அவை எதுவும் சாதியத்தின் வீரியத்தையும் வீச்சையும் காட்டியதாகச் சொல்ல முடியாது.

தொண்ணூறுகளின் பின்னர் உலகமயப்பின்னணியில் சினிமாவில் உருவாகத்தொடங்கிய புதிய போக்குக்கு விட்டேத்தியான விடலைத்தனமும் நோக்கமற்ற வெற்று வன்முறையுமே கச்சாப்பொருளாகியது. அத்தோடு காதலும் சேர்த்தி.

இக்காலத்திலேற்பட்ட தொழில் வளர்ச்சி, புதிய நகரங்களின் தோற்றம், இவற்றோடு உருவாகி வளர்ந்து வந்த நடுத்தர வர்க்கம், பெரும்பாலும் சலுகைகளால் பயன் பெற்ற சாதி இந்துக்கள் எனப்படும் இடை நிலை சாதியினர் போன்றவர்களே இக்கால சினிமாவின் பேசு பொருளாக இருக்கிறார்கள். சினிமாத் தொழிற் துறையும் இதேகாலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை காண்கிறது.

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**சும்மா இருந்து காசு சம்பாதிக்கும் வழிமுறைகளின் உண்மை முகம்**
வீரசிங்கம் | 20-06-2013

**துருக்கியின் இன்றைய நிலவரம்**
27-06-2013

**NGOக்கள் சொல்வதும் செய்வதும்**
04-07-2013

**மூலதன நூலின் கால மாற்றம்**
சி. சிவசேகரம் | 11-07-2013



து. உருத்திரமூர்த்தி

துரைசாமி உருத்திரமூர்த்தி (அளவெட்டி, யாழ்ப்பாணம்) (ஜனவரி 9 1927 - ஜூன் 20 1971) ஈழத்தின் கவிதை மரபில் முக்கியமான கவிஞர்களுள் ஒருவராக கருதப்படுகிறார். இவர் மஹாகவி என்ற புனைபெயரில் எழுதியவர். இவரது ஏனைய புனைபெயர்கள் - பண்டிதர், மாபாடி, காப்பியாற்றுப் காப்பியனார், மகாலட்சுமி, பாணன், வாணன் என்பனவாகும். நீலாவணன், முருகையன் ஆகிய பிரபல ஈழத்து கவிஞர்களோடு சமகாலத்தில் எழுதிவந்தவர்.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## தமிழ் சினிமாவும் அடையாள அரசியலும்
முன்பக்கத் தொடர்ச்சி..

இந்த நடுத்தர சாதியினரின் வாழ்க்கை முறை பேச்சு மொழி சடங்குகள் எல்லாமே சினிமாவில் தமிழகத்தின் பொது அடையாளங்கள் போன்ற சித்தரிப்பை பெற்று நிலைக்கின்றன. இரண்டாயிரங்களில் விடுபட்டுப்போன இப்போக்கு மறுபடியும் இப்போது திரும்புகிறதா எனத்தோன்றுகிறது தனித்தனிச் சாதியடையாளங்கள் பற்றிய கவனிப்பு இலக்கியங்களில் அங்கொன்றிங்கொன்றாகவும் அரசியலில் பொதுப் போக்காகவும் ஏற்பட்டிருக்கும் பின்னணியில் இதைக்கவனிக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே பார்த்தது போல சினிமாவின் மிகையான வெகுசனத்தன்மை பண்பாட்டுத் தளத்தில் மிகக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தொலைக்காட்சி வானொலி பத்திரிக்கை என எல்லா வெகுமக்கள் ஊடகங்களும் சினிமாத் துறையை மையப்பொருளாக கொண்டே இயங்குகின்றன என்பதால் பொதுச்சிந்தனையில் சினிமாவின் சித்தரிப்புகள் ஒரு இடத்தை பெற்றுவிடுகின்றன என்ற வகையில் சினிமாவில் சிறுபான்மையினர் பற்றிய சித்தரிப்புகளையிட்டு சமூக அக்கறையுடையவர்கள் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது கறுப்பானவர்கள் குண்டானவர்கள் திருநங்கைகள் மாற்றுவலுவுடையோர் சமப்பால் உறவுக்காரர் பற்றிய சித்தரிப்புகள், குறிப்பாக நகைச்சுவை என்ற பெயரில் இழிவான சித்தரிப்புகளே இடம்பெறுகின்றன. மேலும் இட ஒதுக்கீடு போன்ற சமூக நீதிக்கு, எதிரான கருத்து வெளிப்பாடுகள் பிறமதத்தவர் மீதான சித்தரிப்புகள், உள்நோக்கம் கொண்ட அரசியல் சித்தரிப்புகள் என பலவும் சமூகத்தின் மீது எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன இதுபோக, பெண்கள் பற்றிய சித்தரிப்புகளைப் பற்றி தனியே சொல்லத் தேவையில்லை. மிக மோசமானவை.

மிகை வன்முறைகளை இரசிக்கத் தக்க ஒன்றாகப் பரப்பியதில் சினிமாவின் பங்கு பெரிது என்ற கருத்துக் குறித்துப் பெரிதாகக் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. அரச இயந்திரத்தின் ஒடுக்கும் கருவியான போலிஸ் பற்றிய மிகைக்கவர்ச்சியான சித்தரிப்புகளும் என்கவுண்டர் பற்றிய நேர்மறையான புனைவுகளும் மிக அபாயகரமானவை. அண்மைக்காலத்தில் நிகழ்ந்த போலி மோதற் கொலைகளை நியாயப்படுத்திய வெகு ஜன ஊடகங்களும் அக்கொலைகளை கொண்டாடிய மக்களும் என பெரும்பாலான தமிழக மக்கள் அக்கொலைகளை நியாயப்படுத்தியது ஆபத்தான அம்சம் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி சினிமா பொதுத்தளத்துடன் கொண்டிருக்கும் உறவென்பது சமூக அக்கறை உடையவர்கள் சினிமாவைத் தொடர்ந்து விமர்சிக்கவும் அதன் மீதான மக்களின் மாயக்கவர்ச்சியை நீக்கவும் தொடர்ந்து செயற்படுவதை அவசியமாக்குகிறது.

### தமிழ் சினிமாவும் அடையாள அரசியலும் (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)


1. பிரமிட் திட்டங்கள், அவை போன்ற ஏனைய மோசடித்திட்டங்கள் பற்றிய அறிமுகம்

2. இவ்வாறான திட்டங்களுக்குப் பின்னால் மக்கள் ஓடுவதற்கான சமூக பொருளாதார காரணிகள்

3. இவ்வகைத் திட்டங்கள் எவ்வாறு இயங்குகின்றன? மக்களை எவ்வாறு கவர்கின்றன?

4. இத்தகைய திட்டங்கள் எவ்வாறு பண மோசடி செய்கின்றன?
5. பிரமிட் வகைத் திட்டங்களை இனங்காண்பதெப்படி?

6. இவ்வாறான மோசடிகளை முறியடிப்பது எவ்வாறு?




## ஈமு கோழி வளர்ப்பு : கவர்ச்சிகரமான மோசடி!

விவசாயத்தில் இடுபொருட்களின் கிடுகிடு விலை உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை, நிச்சயமற்ற பருவ காலங்கள், விவசாயப் பொருட்களுக்கு சந்தையில் நிச்சயமற்ற விலை, இவற்றால் தொடர் நட்டம் முதலானவற்றின் காரணமாக விவசாயிகள் நொடிந்து போயுள்ளனர். விவசாயம் செய்வது தற்கொலைக்குச் சமம் என்று கருதிப் பலரும் மாற்றுத் தொழிலைத் தேட நிர்பந்திக்கப்படுகின்றனர். இப்படி நடுத்தர சிறு விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கான வாழ்வாதாரங்கள் பிடுங்கப்பட்ட பின்னணியில், ஈமு பண்ணை முதலாளிகள் இந்தச் சூழலைப் பயன்படுத்தி விவசாயிகளை ஏய்த்துக் கொள்ளையிடக் கிளம்பியுள்ளனர்.

இப்படிப்பட்ட மோசடிகள் தினந்தோறும் நடந்து வருகின்றன. ஏற்கெனவே அனுபவ் தேக்கு மர வளர்ப்புத் திட்டம், சந்தன மரம் வளர்த்தல், கண்வலி கிழங்கு விவசாயம், முயல் வளர்ப்பு, மருந்துநறுமணச் செடிகள் வளர்ப்பு முதலான மோசடித் திட்டங்கள் மூலம் தமிழகத்தில் விவசாயிகள் ஏ#க்கப்பட்ட கதை யாவரும் அறிந்தது. இதேபோல கோல்ட் குயிஸ்ட், டேட்டா என்டரி, இரிடியம் சுரங்கம் தோண்டுதல் , திருப்பூர் பாசி நிறுவன மோசடி, ஸ்பீக் ஆசியா ஆன் லைன், மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் லாட்டரி பரிசு, மல்டி லெவல் மார்க்கெட்டிங் முதலானவை நகர்புறத்தின் படித்த மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கத்தினரை ஏய்ப்பதற்கான மோசடி திட்டங்களாகும். இப்படிப் புதுப்புது உத்திகளில் ஆண்டுதோறும் மோசடிகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இவ்வகையான திட்டங்களுக்கு முன்னோடி, அமெரிக்காவைச் சேர்ந்த போன்சி என்ற மோசடிப்பேர்வழித்தலானழ். இவன் 1930களில் அமெரிக்கா பெரும் பொருளாதார மந்தத்தில் சிக்கி இருந்தபோது, அங்கு ஈமு வளர்ப்பை ஒத்த பல மோசடிகளை மேற்கொண்டு பல நூறு கோடி டாலர்களைச் சுருட்டிய பின்னர் பிடிபட்டான். ஆகையால், இவ்வகை மோசடிகள் “”போன்சி திட்டம்” என்றழைக்கப்படுக்கின்றன.

உலகமயமாக்கலின் விளைவாக மக்களின் வேலை வாய்ப்புகள், வாழ்வாதாரங்கள் பிடுங்கப்படுகின்றன. அதேநேரத்தில் மக்களை நுகர்வு வெறியில் இழுத்து, உழைப்பின் மேலிருந்த மதிப்பீடுகள் ஒழிக்கப்பட்டு, சம்பாதிப்பதற்கான நெறிமுறைகள் உடைக்கப் படுவதும் நடந்து வருகிறது. இந்தச் சூழல் ஈமு வளர்ப்பு போன்ற போன்சி திட்டங்களுக்கு உரமாக அமைகிறது. ஆகையால், விவசாயிகளும் உழைக்கும் மக்களும் உலகமயமாக்கலுக்கு எதிராக நின்று, இழந்து வரும் வேலைவாய்ப்புகளையும் வாழ்வாதாரங்களையும் மீட்க, மோசடியை முதலனமாகக் கொண்டுள்ள ஈமு கோழி வளர்ப்பு போன்ற திட்டங்களை எதிர்த்துப் போராட முன்வரவேண்டும்.

[ஈமு கோழி வளர்ப்பு என்ற பெயரில் தமிழகத்தில் பரவிக்கொண்டிருந்த மோசடி முதலீட்டுத்திட்டத்தினை அம்பலப்படுத்தி வினவு வலைத்தளம் வெளியிட்டிருந்த கட்டுரையின் பகுதி. vinavu.com/2011/11/12/emu/ ]

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA